**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 101/2018 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Ananthan | CASTE | : | |
| S/O. / W/O. | Muthu Irullan | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை : 10-3-2021**

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், இடம் வேண்டுமென பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கண்ணுச்சாமி என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கண்ணுச்சாமி என்பவர் எனது வீட்டிற்கு பின்புறம் மற்றும் மேற்குபக்கம் உள்ள இடத்தில் பூச்செடிகள், மற்றும் காய்கறி செடிகள் பயிரிட்டது தொடர்பாக பாலமேடு காவல்நிலையத்தில் சுமார் 10 முறையாவது புகார் மனு கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. 3 முறை மட்டும் புகார் மனு கொடுத்துள்ளேன். மேற்படி காவல்நிலைய விசாரணையில் எனது வீட்டிற்கு வடபுறம் மற்றும் மேற்கு பக்கம் உள்ள இடமானது, கண்ணுச்சாமியின் மனைவி கிரையம் பெற்றுள்ளதால், நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தி எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை எனது வீட்டை மட்டும் தான் நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் தவறு ஆகும். காலியிடத்தையும் சேர்த்து தான் அனுபவம் செய்து வருகிறேன். எனது வீட்டிற்கு வடபுறம் மற்றும் மேற்குபுறம் உள்ள இடத்தினை பிரதிவாதியின் மனைவி கிரையம் பெற்று அவர் தான் இன்றைய தேதி வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மனைவி மேற்படி இடத்தை அனுபவம் செய்து வருகின்ற விபரம் தெரிந்தே வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மனைவி பெயரிலான 1997ம் வருட கிரைய பத்திரத்தினை காவல்நிலைய விசாரணையில் காண்பித்தார்கள் என்றும், அதனை நான் பார்த்தேன் என்றும் சொன்னால் இல்லை. பிரதிவாதியின் மனைவி பெயரில் கிரைய பாத்தியமான இடம் இருக்கின்ற விபரம் வழக்கு தாக்கல்

செய்வதற்கு முன்பே எனக்கு தெரிந்திருந்தும் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் பிரதிவாதியின் மனைவி பெயரிலான இடம் பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் சொல்லக்கேட்டு தெரிந்து கொண்டேன். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்தின் ஒரு பகுதியினை பிரதிவாதியின் மனைவி கிரையம் பெற்றதாக எதிர்வாதம் செய்திருந்தபோதிலும், அவரை வழக்கு தரப்பினராக சேர்ப்பதற்கு இன்றையதேதி வரை எவ்வித மனு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் தாவா சொத்தின் ஒரு பகுதி உரிமையை பிரதிவாதி மறுப்பதால், நான் மேற்படி வழக்கு பரிகாரத்தில் தாவா சொத்து தொடர்பாக விளம்புகை பரிகாரம் கோருவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம். D. ராம்கணேஷ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.